www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

15×1=15

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

1) வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3) "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ________
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

4) முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் ________
அ) குலேச பாண்டியன் ஆ) கூன் பாண்டியன்
இ) அதிவீரராமபாண்டியன் ஈ) பொற்கைப் பாண்டியன்

5) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய மொழிபெயர்ப்பு இருந்தது

7) தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான், கலைஞர் என்ற சிறப்புபெயர் வழங்கப்பட்டது. - இத்தொடருக்கான வினா எது?
அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?
இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?
ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

8) அருந்துணை என்பதைப் பிரித்தால் ________
அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அரு+இணை

9) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும், பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

10) எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

11) சதம் என்றால் என்று பொருள்
அ) பத்து ஆ) ஆயிரம் இ) இலட்சம் ஈ) நூறு

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net  www.Trb Tnpsc.Com



உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்:
உந்துவளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) சிலப்பதிகாரம் இ) மலைபடுகடாம் ஈ) பரிபாடல்

13) இப்பாடல் எந்த நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) ஐம்பெருங்காப்பியங்கள் ஈ) ஐஞ்சிறுங்காப்பியங்கள்

14) இப்பாடலில் பரமாணு என்று பொருள் தரும் சொல்லைக் கண்டறிக.
அ) கரு ஆ) அணு இ) பார் ஈ) உரு

15) பிரித்து எழுதுக: செந்தீ
அ) செந்+தீ ஆ) செம்+தீ இ) செம்மை+தீ ஈ) சென்+தீ

## பகுதி - II

### பிரிவு - அ

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:-
(வினா எண்.21க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 4×2=8

16) விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கையைப் பெற்றிருக்கிறோம்
ஆ) பாரதியார் சிந்துக்குத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

17) மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
இவ்வடிகளில் இடம்பெற்ற ஐம்பெருங்காப்பியங்களில் எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்கள் யாவை?

18) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

19) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

21) 'விடல்' - என முடியும் குறட்பாவினை எழுதுக.

### பிரிவு - ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 5×2=10

22) வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23) கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க
அ) கொள் - கோள் ஆ) கொடு - கோடு

24) ஆண்பாற்பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக
தந்தை, "மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா" என்றார்.

25) கலைச்சொற்கள் தருக. அ) Discussion ஆ) Symbolism

26) பகுபத உறுப்பிலக்கணம் தருக: அமர்ந்தான்

27) தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க
அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும் ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

28) பழமொழியை நிறைவு செய்க
அ) விருந்தும் ............................
ஆ) அளவுக்கு ..................

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×3=6

29) "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" - வினவுவது ஏன்?

30) சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதைப் போல் ஓர் உரையாடல் அமைக்க.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உணவு உண்ண இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

வினாக்கள்:

அ) விருந்தினர் என்போர் யார்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) புதுமை என்பது ............ பெயர்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×3=6

(வினா எண். 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34) அடிபிறழாமல் எழுதுக.

அ) சிறுதாம்பு ........ எனத் தொடங்கும் முல்லைப் பாட்டுப் பாடல் (அல்லது)

ஆ) வெய்யோனொளி........ என்னும் கம்பராமாயணப் பாடல்

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 2×3=6

35) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்
- இத்திருக்குறளில் பயின்று வரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

36) வஞ்சிப்புகழ்ச்சி அணியினைச் சான்றுடன் விளக்குக

37) செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 5×5=25

38) அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39) அ) மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நண்பனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)

ஆ) நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41) கோவை மாவட்டம், துடியலூர், பெரியார் நகரிலுள்ள 75ஆம் இலக்க வீட்டில் வசித்து வரும் ஆதித்தன் என்பவரின் மகன் அமுதன் அப்பகுதியிலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்புப் பயின்று வருகிறான். அவன் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து நீச்சல் விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறான். தேர்வர் தன்னை அமுதனாகப் பாவித்துக் கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவத்தினை நிரப்புக.

42) அ) தமிழர் மருத்துவமுறைக்கும், நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்

Malar: Devi, Switch off the lights when you leave the room

Devi: Yeah, we have to save electricity

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by light on areas that lost power!

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:-

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழையிலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர். அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

i) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் எந்த விழாவைக் கொண்டாடி வருகிறது?

ii) அங்கு தமிழர்களின் எவ்வகை உணவு வைக்கப்படுகிறது?

iii) யார் இந்த விருந்தில் பங்கேற்கின்றனர்?

iv) இந்த விழா எப்போது கொண்டாடப்படுகிறது?

v) தொடர்ந்து என்ன நிகழ்வுகளை நிகழ்த்துவர்?

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:- 3×8=24

43) அ) தமிழின் சொல்வளம், பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

44) அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டையும் எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) "கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே" - என்கிறது வெற்றி வேற்கை - மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க

45) அ) முன்னுரை - தோற்றமும் வளர்ச்சியும் - இணையம் - இணையதள வளர்ச்சி - கணினிவழிக் கல்வி - பயன்படும் துறைகள் - உலகம் உள்ளங்கையில் - முடிவுரை (அல்லது)

ஆ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

*********

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com